# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் அவசர கூட்டம் 2021–ம் வருடம் நவம்பர் மாதம் 19–ம் தேதி காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## பொருட்கள்

1) நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மை தலைமைப்பொறியாளர் , அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் .20006/2020/குவ3, நாள். 09.11.2020 ன் படி பத்மனாபபுரம் நகராட்சியில் குடிநீர் கட்டணங்கள் உயர்த்தி வசூலிக்க குடிநீர் விநியோக உப விதிகளில் திருத்தம் செய்ய பொது அங்கீகாரம் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் வழங்கி உத்திரவிடப்பட்டது.

## நிபந்தனைகள்–

1.நகராட்சி ஆணையாளர், பத்மனாபபுரம் அவர்கள் இப்பொருள் தொடர்பாக குடிநீர் விநியோக உப விதிகளில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) உரிய திருத்தம் மேற்கொண்டு விதிகளுக்குட்பட்டு மேற்கண்ட குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத்தொகை வசூலிக்கப்பட வேண்டும்.

2. பத்மனாபபுரம் நகராட்சி நகர்மன்ற தீர்மானத்தின் படியும் ஒவ்வொரு 5 ஆண்டிற்கும்

10 % க்கும் குறையாமல் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத்தொகை உயர்த்தி வசூலிக்கப்பட வேண்டும். மேலும் புதிய குடிநீர் இணைப்புகளுக்கான குடிநீர் கட்டணம் ஏற்கனவே அமுலில் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கும் பொருந்தும் என்பதினை உபவிதிகளில் திருத்தம் செய்யப்படவேண்டும்.

3.உயர்வு செய்யப்பட்ட குடிநீர் கட்டணம் மற்றும் அதே வைப்புத்தொகை விபரங்களை நாளிதழில் ( தமிழ் மற்றும் ஆங்கிலம் ) வெளியிட்டு பொது மக்களின் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட வேண்டும் .

4.திருத்தம் செய்யப்பட்ட குடிநீர் விநியோக உபவிதிகளை மாவட்ட அரசிதழில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) பிரசுரம் செய்து அதன் நகல்கள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

5.தேவையான நகர்மன்ற தீர்மானம் மற்றும் துணை விதிகள் நகல்கள் போன்றவற்றுடன் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முறைப்படி விண்ணப்பித்து இறுதி அங்கீகாரம் பெறப்பட வேண்டும் .

6.இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண். 748/2088/குவ2, நாள்.21.09.2009 –ல் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டும்.

7.குடிநீர் விநியோக திட்டத்திற்கான உரிய அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டுமெனவும் அனுமதியற்ற வீட்டுக்குழாய் இணைப்புகளை முறைப்படுத்துதல் தொடர்பான அரசாணையை பின்பற்றும் படியும் அறிவுறுத்தப்படுகிறது.

8.பொது அங்கீகாரம் பெற்ற பின் அதை நகர்மன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றி நாளிதழில் பிரசுரம் ஆகும் முன் அத்தீர்மான நகலை இவ்வலுவலகத்திற்குஅனுப்பபட வேண்டும்.
மேற்கண்டவாறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சியில் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத்தொகையை உயர்வு செய்து குடிநீர் விநியோக உப விதிகளில் திருத்தம் செய்ய கீழ்க்கண்டவாறு இந்நகர்மன்றத்தீர்மானம் எண்.1508, நாள். 30.08.2019 ல் குடிநீர் விநியோக கட்டணங்களுக்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத்தொகையை கீழ்கண்டவாறு உயர்வு செய்து குடிநீர் விநியோக உப விதிகளில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு திருத்தம் செய்யவும் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை உயர்த்தி வசூலிக்க குடிநீர் உபவிதிகளில் திருத்தம் செய்யப்பட்ட அறிவிப்பினை தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் சிறிய அளவில் பிரசுரிக்கப்பட்டது.

| வ.எண். | குடிநீர் பயன்பாடு விபரம் | தற்போதுள்ள கட்டணம் | | உயர்த்தப்பட உள்ள கட்டணம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மாதம் ஒன்றிற்கு குடிநீர் கட்டணம் | வைப்புத் தொகை | மாதம் ஒன்றிற்கு குறைந்த பட்ச குடிநீர் கட்டணம் | | | வைப்புத் தொகை | | |
| | | ரூ. | ரூ. | ரூ. | | | ரூ | | |
| 1 | வீட்டு பயன்பாடு இணைப்பு ஒன்றிற்கு | 60/– | 2000/– | 1 | 500 சதுர அடிக்கு குறைவானது | 120/– | 1 | 500 சதுர அடிக்கு குறைவானது | 5000/– |
| | | | | 2 | 501 முதல் 1200 சதுர அடி வரை | 160/– | 2 | 501 முதல் 1200சதுர அடி வரை | 7500/– |
| | | | | 3 | 1201 முதல் 2400 சதுர அடி வரை | 200/– | 3 | 1201 முதல் 2400 சதுர அடி வரை | 10000/– |
| | | | | 4 | 2401 சதுர அடிக்கு மேல் | 240/– | 4 | 2401 சதுர அடிக்கு மேல் | 15000/– |
| 2 | வணிக (ம)தொழிற்சாலை பயன்பாடு இணைப்பு ஒன்றிற்கு | 120/– | 4000/– | 1 | 500 சதுர அடிக்கு குறைவானது | 240/– | 1 | 500 சதுர அடிக்கு குறைவானது | 10000/– |
| | | | | 2 | 501 முதல் 1200சதுர அடி வரை | 320/– | 2 | 501 முதல் 1200சதுர அடி வரை | 15000/– |
| | | | | 3 | 1201 முதல் 2400 சதுர அடி வரை | 400/– | 3 | 1201 முதல் 2400 சதுர அடி வரை | 20000/– |
| | | | | 4 | 2401 சதுர அடிக்கு மேல் | 480/– | 4 | 2401 சதுர அடிக்கு மேல் | 30000/– |
| *மேற்குறிப்பிட்ட தொகை 2401 சதுர அடி பரப்பளவிற்கான சராசரி தொகையாகும். 2401 சதுர அடி பரப்பளவிற்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு அதன் பரப்பளவிற்கேற்ப மேற்படி கட்டண விகிதங்களில் அடிப்படையில் கட்டணங்கள் உயர்த்தப்படும். | | | | | | | | | |

**1)**பத்மனாபபுரம் நகராட்சி மன்றத் தீர்மானத்தின் படியும் மற்றும் தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிறுவனத்தின் நிபந்தனைகளின் படியும், ஒவ்வொரு ஆண்டிற்கும் 5% க்கும் குறையாமல் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை உயர்த்தி வசூலிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**2)**நகராட்சி மூலம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்புகளுக்கு மேற்கண்ட உயர்த்தப்பட்ட குடிநீர் கட்டணங்கள் பொருந்தும்.

**3)**மேற்கண்ட உயர்த்தப்படவுள்ள குடிநீர் கட்டணங்களில் பொது மக்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட தியதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் எழுத்து மூலம் நகராட்சி அலுவலகத்தில் தெரிவிக்கலாம் என பிரசுரிக்கப்பட்டது.

அதன்படி உயர்த்தப்படவுள்ள குடிநீர் கட்டணங்களில் பொது மக்களிடம் ஆட்சேபனை மற்றும் ஆலோசனை ஏதுமின்றி மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டு குடிநீர் விநியோக உப விதிகளில் திருத்தம் செய்யவும் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத்தொகை உயர்த்தி வசுலிக்கவும் குடிநீர் உப விதிகளில் திருத்தம் செய்துள்ள அறிவிப்பினை மாவட்ட அளவில் சிறப்பினமாக 16/09/2021 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டது. அதன்படி குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத்தொகை உயர்த்தி வசூலிக்கவும் குடிநீர் உப விதிகளுக்கு இறுதி அங்கீகாரம் வழங்கவும் வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1200/2017/இ1)
அ.கு– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண். 1835</u>**
அனுமதிக்கப்படுகிறது.

2) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 21191/2021/அம்ருட்-2 நாள் 13/11/2021-ன் படி இந்நகராட்சிக்கு 15-வது மத்திய நிதிக்குழு (Tied Grant 2nd Installment of Tied grants released to million Plus Cities and Non - Million Plus Cities 2020-21)-ன் கீழ் ஏற்கனவே முதல் மற்றும் இரண்டாவது கட்டமாக மானியம் விடுவிக்கப்பட்டு அதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் அதனடிப்படையில் 2020-2021 ஆம் ஆண்டிற்கு மேலும் பணிகள் எடுக்கப்படுவதற்கான நிலுவைத் தொகை ரூ. 58.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதன் படி இனம்- ஆ வில் பனிரெண்டாவது

அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 18 இனங்களின் கீழ். வ.எண். 5, 11 மற்றும் 17ல் குறிப்பிட்டுள்ள பணிகளின்படி கீழ்க்கண்டவாறு பணிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 58.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| 15th CFC 2020-2021 ( Un Tied) | | | |
|---|---|---|---|
| Sl.No. | Name of work | Length in (M) or No's | Estimate amount in Lakhs |
| 1. | Improvement of BT surface at Melancode road (from Mattaya Kulam to Palace and from Asankinaru to Melancode temple) in Padmanabhapuram Municipality | 775.00 | 36.70 |
| 2. | Providing CC road with Strom water drain with cover slab at Ramaswamy kovil street in Padmanabhapuram Municipality. | 60.00 | 7.50 |
| 3. | Construction of Culvert at Market Road in front of Chanthai gate and Supply and Fixing of three seater chairs at Thuckalay Bus Stand. | 1.00 | 6.00 |
| 4. | Providing Two wheeler parking at Padmanabhapuram Municipal Office in Padmanabhapuram Municipality. | 1.00 | 3.70 |
| 5. | Construction of Drainage wall at Arasuvilai near Sanitary Quarters (Flood Affected Area) | 10.00 | 4.10 |
| | **Total** | | **58.00** |

மேற்படி 15வது மத்திய நிதிக்குழுவின் 2020-2021 ஆம் ஆண்டிற்கு மேலும் பணிகள் எடுக்கப்படுவதற்கான நிலுவைத் தொகை ரூ.58.00 இலட்சத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்க வேண்டியும் அதன்படி மேற்காணும் பணிகளில் வரிசை எண். 1-ல் காணும் சாலைப் பணிக்கு (மதிப்பீடு ரூ. 36.70 இலட்சம்) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களிடம் நிர்வாக அனுமதி வழங்க

வேண்டியும் பணி மேற்கொள்ளும் பொருட்டு மண்டல செயற் பொறியாளர், திருநெல்வேலி அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெறவும் மேலும் வரிசை எண். 2 முதல் 5 வரையிலான பணிகளுக்கு இந்நகர்மன்றம் அனுமதி வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1180/2021/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1836</u>**

அனுமதிக்கப்படுகிறது.

3) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 21191/2021/அம்ருட்-2 நாள் 13/11/2021-ன் படி இந்நகராட்சிக்கு 15-வது மத்திய நிதிக்குழு (Tied Grant 2nd Installment of Tied grants released to million Plus Cities and Non - Milli 2020-21)-ன் கீழ் ஏற்கனவே முதல் மற்றும் இரண்டாவது கட்டமாக மானியம் விடுவிக்கப்பட்டு அதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் அதனடிப்படையில் 2020-2021 ஆம் ஆண்டிற்கு மேலும் பணிகள் எடுக்கப்படுவதற்கான நிலுவைத் தொகை ரூ. 58.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதன் படி இனம்- ஆ வில் பனிரெண்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 18 இனங்களின் கீழ். வ.எண். 5, 11 மற்றும் 17ல் குறிப்பிட்டுள்ள பணிகளின்படி கீழ்க்கண்டவாறு பணிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 58.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| 15th CFC 2020-2021 ( Un Tied) | | | |
|---|---|---|---|
| Sl.No. | Name of work | Length in (M) | Estimate amount |

| | | or No's | in Lakhs |
|---|---|---|---|
| 1. | Improvement of BT surface at Melancode road (from Mattaya Kulam to Palace and from Asankinaru to Melancode temple) in Padmanabhapuram Municipality | 775.00 | 36.70 |
| 2. | Providing CC road with Strom water drain with cover slab at Ramaswamy kovil street in Padmanabhapuram Municipality. | 60.00 | 7.50 |
| 3. | Construction of Culvert at Market Road in front of Chanthai gate and Supply and Fixing of three seater chairs at Thuckalay Bus Stand. | 1.00 | 6.00 |
| 4. | Providing Two wheeler parking at Padmanabhapuram Municipal Office in Padmanabhapuram Municipality. | 1.00 | 3.70 |
| 5. | Drainage wall at Arasuvilai near Sanitary Quarters (Flood affected Area) | 10.00 | 2.00 |
| | Total | | **58.00** |

மேற்படி 15வது மத்திய நிதிக்குழுவின் 2020-2021 ஆம் ஆண்டிற்கு மேலும் பணிகள் எடுக்கப்படுவதற்கான நிலுவைத் தொகை ரூ.58.00 இலட்சத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்க வேண்டியும் அதன்படி மேற்காணும் பணிகளில் வரிசை எண். 1-ல் காணும் சாலைப் பணி (மதிப்பீடு ரூ. 36.70 இலட்சம்) மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி நிவாக மண்டல இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதியும், மண்டல செயற் பொறியாளர், திருநெல்வேலி அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெறவும் மேலும் வரிசை எண். 2 முதல் 5 வரையிலான பணிகளுக்கு இந்நகர்மன்றம் அனுமதி வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1180/2021/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1837</u>**
அனுமதிக்கப்படுகிறது.

4)கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-2022 ()-ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட தக்கலை பேட்டை சந்தையில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.120.45 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>மன்றத் தீர்மானம் எண். 1838</u>**
அனுமதிக்கப்படுகிறது.

5) சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரின் 02/10/2021 ம் தேதிய ந.க.எண். 21287/2021/2 மற்றும் ஒப்பந்த ஆவண தெளிவுரையில் நகராட்சி/மாநகராட்சியில்

1)திடக்கழிவு மேலாண்மை பணிகள்.
2)குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல்.
3)கழிவுநீர் அகற்றுதல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல்.
4)தெரு விளக்குகள் இயக்கி பராமரித்தல்.

ஆகிய சேவை பிரிவு சார்ந்த கட்டமைப்புகளை இயக்குதல், பராமரித்தல் தொடர்பான பணிகளை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாட்களை அமர்த்தி செய்திடும் போது ஒவ்வொரு மாநகராட்சிகளும், நகராட்சிகளும் வெவ்வேறு அளவுகோலின்படி பணியாட்கள் அமர்த்துவதும் மற்றும் ஒரே மாதிரியான பணியாளர்களுக்கு ஒவ்வொரு மாநகராட்சி/நகராட்சிகளில் வெவ்வேறு விதமான ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகவும் அதனை சரி செய்யும்

பொருட்டு திடக்கழிவு மேலாண்மை பணிகள், குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல், தெருவிளக்குகள் இயக்கி பராமரித்தல், பணிகளில் ஒப்பந்த அடிப்படை பணியாளர்களை நியமித்திட உரிய அளவுகோல்கள், ஊதிய நிர்ணயம் மற்றும் பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் நியமிப்பதில் உரிய ஒப்பந்த வழிமுறைகள் ஆகியவற்றை ஒருமித்த கருத்து அடிப்படையில் வழங்கிட முடிவு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி வழங்கப்பட்டுள்ள தெளிவுரைகளின் அடிப்படையில் பத்மனாபபுரம் நகராட்சியில் கீழ்க்கண்டவாறு

1) திடக்கழிவு மேலாண்மை பணிகள்.
2) குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல்.
3) கழிவுநீர் அகற்றுதல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல்.
4) தெருவிளக்குகள் இயக்கி பராமரித்தல்.

ஆகிய பணிகளுக்கு தேவைப்படும் செலவின மதிப்பீட்டு திட்ட அறிக்கையினை சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரின் முதன்மை அனுமதி பெற்று வெளிக்கொணர்வு முகமை (Out Source) மூலம் பணியமர்த்தி கொள்ளவும், இந்நடவடிக்கைகளுக்குரிய செலவினத்தை நகராட்சி பயனாளர் சேவைக் கட்டணம் குடிநீர் வடிகால் நிதி மற்றும் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>மன்றத் தீர்மானம் எண். 1839</u>**

அனுமதிக்கப்படுகிறது.

6) .இந்நகராட்சியில் **15வது மத்திய நிதிக்குழு 2021-2022 -ன்** கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள பொது சுகாதார பிரிவிற்கு **டேங்கர் லாரி** வாங்க விலை நிரக்கு பட்டியலில் விலை விபரம் இல்லாத காரணத்தால் உள்ளூர் நிறுவனதாராரிடம் கீழ்க்கண்டவாறு முன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது

| வ.எண் | நிறுவனதாரரரின் பெயர் | விலை விபரம் |
|---|---|---|
| 1 | We Look Enterprizes,Thuckalay. | 20,40,000.00 |

| | | |
|---|---|---|
| 2 | Galaxy Systems, Marthandam | 20,25,000.00 |
| 3 | ONYX Green Tech, Arumanai. | 19,000,00.00 |

மேற்படி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வ.எண் 3ல் காணும் நிறுவனதாரரின் விலைப்புள்ளியின் அடிப்படையில் **டேங்கர் லாரி** வாங்க ரூ.19.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது மேற்கண்ட மதிப்பீட்டினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு

**<u>மன்றத் தீர்மானம் எண். 1840</u>**
அனுமதிக்கப்படுகிறது.

.7) இந்நகராட்சியில் **15வது மத்திய நிதிக்குழு 2021-2022** -ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள பொது சுகாதார பிரிவிற்கு **3 no's of Automatic hydraulic type BOV** மற்றும் **2 no's of Manual hydraulic type BOV வாங்க** வாங்க விலை நிரக்கு பட்டியலில் விலை விபரம் இல்லாத காரணத்தால் உள்ளூர் நிறுவனதாரரிடம் கீழ்க்கண்டவாறு முன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது

| வ.எண் | பணியின் விபரம் | நிறுவனதாரரின் பெயர் | விலை விபரம் |
|---|---|---|---|
| 1 | **3 no's of Automatic hydraulic type BOV** | We Look Enterprizes,Thuckalay. | 9,45,000.00 |
| 2 | | Galaxy Systems, Marthandam | 9,15,000.00 |
| 3 | | ONYX Green Tech, Arumanai. | 8,25,000.00 |
| 1 | **2 no's of Manual hydraulic type BOV** | We Look Enterprizes,Thuckalay. | 5,20,000.00 |
| 2 | | Galaxy Systems, Marthandam | 5,00,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 3 | | ONYX Green Tech, Arumanai. | 4,80,000.00 |

மேற்படி **3 no's of Automatic hydraulic type BOV** வாகனத்திற்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வ.எண் 3ல் காணும் ONYX Green Tech, Arumanai.

நிறுவனதாரரரின் விலைப்புள்ளியின் அடிப்படையில் **3 no's of Automatic hydraulic type BOV** வாங்க ரூ.8.25 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது மற்றும் **2 no's of Manual hydraulic type BOV** வாகனத்திற்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வ.எண் 3ல் காணும் ONYX Green Tech, Arumanai. நிறுவனதாரரரின் விலைப்புள்ளியின் அடிப்படையில் ரூ.4.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது மேற்கண்ட மதிப்பீட்டினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு

**மன்றத் தீர்மானம் எண். 1841**
அனுமதிக்கப்படுகிறது.

ஒப்பம்/-

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்
பத்மனாபபுரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.